## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. சந்திரசேகரன் | அசல் வழக்கு எண். | 1/2015 |
| த/பெ. | - | அர்ச்சுனகவுண்டர் | வா.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

03.06.2026

**2, 4, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் கடந்த 6 மாதமாக தான் தெரியும். வாதியும் நானும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். வாதி கடந்த 10 வருடங்களாக நீதிமன்றத்திற்கு வந்து செல்வது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் பிரமாண பத்திரிக்கை எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லியதின் அடிப்படையில் வாதியின் வழக்கறிஞர் தயார் செய்தது. நீதிமன்றத்திலிருந்து எனக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் குப்புசாமிகவுண்டர் மகன் அர்ச்சுணகவுண்டர். என் தகப்பனாரான அர்ச்சுணகவுண்டர் எந்த வருடம் இறந்தார் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் தகப்பனாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 3 ஆண் மற்றும் ஒரு பெண் வாரிசுகள். வழக்கு சொத்தை தவிர்த்து எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்து என் அப்பாவிற்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது. வழக்கு சொத்தை என் அப்பா உயிருடன் இருந்த வரை ஏற்பாடு செய்துள்ளாரா என்றால் இல்லை. என் அப்பா இறந்த பின்பு வாதி, நான் மற்றும் கெங்காதரன் ஆகியோர் வழக்கு சொத்தை பொதுவாக அனுபவித்து வந்தோமா என்றால் பொதுவாக தான் அனுபவித்து வந்தோம். எந்த வருடம் வரை நாங்கள் பொதுவாக அனுபவித்து வந்தோம் என்றால் என் அப்பா காலமான பின்பு 10 வருடங்கள் பொதுவாக அனுபவித்து வந்தோம். பொதுவாக அனுபவித்து வந்து எந்த வித ஏற்பாடும் இல்லாமல் கெங்காதரன் மனைவியிடமிருந்து நானும் வாதியும் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் பூர்வீக வழிமுறையில் கிடைத்த சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். வாதி எவ்வளவு விஸ்தீரணம் பூமிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

3. என்னுடைய கிரையப்பத்திரத்தை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை. நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பட்டா எண்.7 உள்ள சொத்தை தான் நானும் வாதியும் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம்

பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் 2012ம் ஆண்டில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் வருடம் எனக்கு நினைவில்லை. நானும் வாதியும் கிரையம் வாங்கிய சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி அனுசியா பெயருக்கு 1ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா குப்புசாமிகவுண்டர் பெயரில் பட்டா உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாளது வரை எனது தாத்தா குப்புசாமி கவுண்டர் பெயரில் பட்டா உள்ளதா என்று பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4. என் தந்தை அர்ச்சுனகவுண்டர் இறந்த பின்பு நானும் எனது சகோதரர்களும் பதிவு செய்த பாகப்பிரிவினை செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து என் தந்தை குப்புசாமி மகன் அர்ச்சுனகவுண்டருக்கு கொடுக்கப்பட்ட பட்டா சொத்து இல்லை என்றும் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பட்டா சொத்து என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தான் அனுபவித்து வருகின்றனர் என்றும் நானும் எனது சகோதரர்களும் எந்த காலத்திலும் அனுபவித்தில் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டாவை என் தந்தை பெயரில் உள்ளதாக சொல்லி நானும் எனது சகோதரர்களும் வழக்கு சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. நானும் வாதியும் கிரையம் வாங்கிய பிறகு எங்களது பெயரில் பட்டா மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் தவறான ஆவணங்களை ஏற்படுத்தியதால்தான் வருவாய் துறையால் எங்களுக்கு பட்டா வழங்கபடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு

**சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் என் தம்பிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif

Vanur.